* 132 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether sales tax exemption has been granted on the sales of handloom pillow covers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) கரூரில் உள்ள கரூர் நெசவு-பின்னல் தொழிற்சாலை உரிமையாளர் சங்கச் செயலாளர் கேட்டுக்கொண்டதன் பேரில், அரசாங்கம், கைத்தறித் தலையணை உறை விற்பனைக்கு தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி செலுத்த வேண்டியதில்லையென விலக்கு அளித்துள்ளது. இவ்வரி விலக்கு 27-12-1967 தேதியிலிருந்து (அதாவது இவ்வறிவிப்பு தமிழ்நாடு அரசாங்க இதழில் வெளியான தேதியிலிருந்து) செயலுக்கு வந்தது. 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் விதித் துறைகளின் கீழ், இம்மாநிலத்திலிருந்து மாநிலங்களுக்கு இடையே நடைபெறும் கைத்தறித் தலையணை உறை விற்பனைக்கும் 27-12-1967 தேதியிலிருந்து இச்சட்டத்தின் கீழ் வரி செலுத்த வேண்டியதில்லையென இப்போது விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி தலையணை உறைக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பது போல் ஏனைய கைத்தறித் துணிகளுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதன் மூலம் க்ஷீணதிசை அடைந்துள்ள அந்தத் தொழில் வளம் பெறுவதற்கு உதவியாக இருக்காதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கைத்தறித் தொழில் க்ஷீண தசை அடைந்திருப்பதை நிவர்த்திப்பதற்கு வேறு பல நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வழியின் மூலம்தான் அப்படிச் செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. அதனுடைய விலை அதிகமாக இருப்பதினாலே கைத்தறித் தொழிலைப் பொறுத்த வரையில் சங்கடங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு சி. கோவிந்தராசன் : உணவுத் துறையைப் பொறுத்த வரையில் உளுந்து, பயறு போன்றவற்றிற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கேள்வியிலிருந்து இது எழவில்லை. இது கைத்தறித் துணியைப் பற்றிய பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது உணவு பற்றிய பிரச்சினை.

திரு. மு. ச. சிவசாமி : தேங்காய் அழுகும் பொருளாக இருப்பதால், தேங்காய்க்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : விற்பனை வரி மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட மேலான யோசனைகள் எல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே பண்டிகைக் காலங்களில் கைத்தறித் துணி விற்பனையில் 10 சத விகிதம் தள்ளுபடி செய்வது போன்று சாதாரண காலங்களிலே 5 சத விகிதம் தள்ளுபடி கொடுக்கிறார்கள். தேங்கியிருக்கிற துணியின் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக பண்டிகைக் காலங்களில் 10 சத விகிதம் இருப்பது

போலவே நிரந்தரமாக, இன்னும் கூடுதலாகவே சத விகிதத்தை அதிகரித்து கொடுப்பதன் மூலம் கைத்தறித் துணித் தேக்கத்தின் மூலம் ஏற்படும் நெருக்கடியை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் முயலுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கைத் தறித் துணித் தேக்கத்தை நிவர்த்திப்பதற்கு பல் வறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முன்பு நான் குறிப்பிட்டதைப் போன்று இந்த யோசனைகளெல்லாம் விற்பனை வரி மானியத்தின் மீது பேசும்போது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. நா. வீராசாமி : கைத்தறித் தலையணை உறைக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருப்பதாக தெரிவித்தார்கள். அப்படி விலக்கு அளிப்பதன் மூலம் இந்த அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதன் மூலம் சொற்ப தொகைதான், சொற்பம்கூட சரி அல்ல, நஷ்டம் ஏற்படுகிறது. மெட்ராஸ் ஜெனரல் ஸேல்ஸ் டாக்ஸ் மூலம் ரூ. 28,000-ம், சென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸ் மூலம் ரூ. 10,600-ம் இதனால் நஷ்டம் ஏற்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தமிழ்நாட்டிலே கைத்தறித் துணிகளுக்குப் போடப்படுகின்ற விற்பனை வரிகள் மூலம் எவ்வளவு தொகை கிடைக்கின்றது ? விற்பனை வரியை எடுத்துவிட்டால், அந்த இழப்பை சரிக்கட்ட வேறு வழி வகைகளை அரசு கையாளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கைத்தறித் தொழிலின் வளர்ச்சியிலே இருக்கிற அக்கறையை நான் பாராட்டுகிறேன். அவர்கள் சொல்லுகிற யோசனை கொஞ்சம் பயங்கரமான யோசனை. கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக வேறு பல முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் நிதி நிலைமைகளை அனுசரித்து வரியைக் குறைவாக வைத்து நடத்த வேண்டும் என்பதுதான் பேரறிஞர் அண்ணா அமைத்துத் தந்த வழியாகும். அது பரிசீலனைக்கு உரியதா என்பது நம்முடைய நிதி நிலைமை வசதிகளைப் பொறுத்தது.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் பெல்ஜியத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மத கன்னிமார்கள் கண் பார்வை இழந்தவர்களுக்கும், முடமானவர்களுக்கும் விடுதி நடத்துகின்றார்கள். அங்கே உள்ளவர்கள் லேஸ் போன்றவற்றைத் தயாரித்து பம்பாய் முதலிய இடங்களுக்கு அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பக்கூடிய லேஸ்களுக்கு ஸேல்ஸ் டாக்ஸ் விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வரி விலக்கு அளிக்க தற்போது அரசாங்கத்தினிடம் ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினருக்குச் சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

Under Section 17 of the Madras General Sales Tax Act, we have provided for the grant of exemption from liability to pay tax in respect of any sale or purchase of any specified goods or class of goods or by any specified class of persons.

17-வது விதியை அனுசரித்து தனியான நிறுவனத்திற்கு தனியான விதி விலக்கு அளிக்கும் உரிமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதிலே இருக்கிற விசேஷ அடிப்படையிலே அரசாங்கம் விதி விலக்கு அளிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அதன் மதிப்பின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலையணை உறையை ஓரளவிற்கு வசதியுடையவர்கள்தான் வாங்க முடியும். அதற்கு விதி விலக்குக் கொடுத்திருக்கிறோம். பாமர மக்கள் வாங்கக் கூடிய ஜவுளிக்கு விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு அளித்தால் பாமர மக்களுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, எல்லாக் கைத்தறித் துணிகளுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் திரு க. எம். ராஜா அவர்களுக்குச் சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. விற்பனை வரி கைத்தறித் தொழிலுக்கு இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் உத்தேசம் அல்ல. எல்லாவற்றிற்குமே வரி இல்லாமல் இருக்கக்கூடிய அரசாங்கம் வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கொள்கை. ஆனால் அந்தக் காரியத்திற்கு மத்தியில் சில தவிர்க்க முடியாத விதி, கடமைகளை அரசு மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த அம்சத்தின் அடிப்படையில்தான் அது பரிசீலிக்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : May I know what the total collection made is by way of sales tax on handloom goods sales in our State. If there is waiver of the tax, would it affect our Exchequer very badly?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I want notice, Sir.

Crop failure in Tiruchirappalli district

* 133 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pheased to state—

(*a*) whether the Government have received any report from the Collector of Tiruchirappalli district relating to crop failure in that district this year (1968); and

(*b*) if so, whether a copy of the report will be placed on the Table of the House?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. ராஜ குமார் விஜய ரகுநாத தொண்டமான் : ஒரு மாதத்திற்கு முன்பு, புதுக்கோட்டை டிவிஷனிலுள்ள விவசாயிகள் பல மனுக்களைக் கலெக்டரிடம் கொடுத்தார்கள். சாவியாய்ப் போன இடங்களுக்கு வரி வஜா செய்ய வேண்டும், கடன் தவணையைத் தள்ளிப் போடவேண்டும், கொள் முதலை நிறுத்தி வைக்க வேண்டும் என்று ஒரு மனு கொடுத்தார்கள். அதைப் பற்றிக் கலெக்டர், அரசாங்கத்திற்குத் தகவல் ஏதேனும் தெரிவித்தாரா, அரசு அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப் பற்றிய விவரம் தற்போது என் வசம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, திருச்சியைப் போலவே இந்த ஆண்டு தென்னாற்காடு மாவட்டத்திலும் சில பகுதிகள் வறண்டு போயிருக்கின்றன. குறிப்பாகத் தென்னாற்காடு மாவட்டத்தில், திண்டிவனம், செஞ்சி போன்ற பகுதிகள் பொதுவாகவே வறண்டு பாய்விடன என்றாலும், தனித் தனி கிராமங்களாக எடுத்து, தவறான புள்ளி விவரங்களின் அடிப்படையில் சில கிராமங்களில் விளைச்சல் இருந்தது, சில இடங்